**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 59. ஸ்ரீமான். ப்ரம்மச்சாரி**

---

**ப்ரம்மச்சாரி என்பவன் யார்?**

வெறும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பவன் ப்ரம்மச்சாரி அல்லன்.தன் மனதை அல்ப ஆசைகளில் புலன்களை போக இச்சைகளில் செலுத்தாமல் ஆன்மீக ஞானம் தேடுவதில் செலுத்தும் எவனும் எவளும் ப்ரமச்சாரியே! கல்யாணம் ஆகியும் ப்ரம்மச்சாரிகளாய் வாழ்ந்தோர் பலர். உதாரணம்: காந்தி, பரமஹம்சர், பாரதியார் மற்றும் பலர்.

மனதை தெய்வீக சத்யத்திடம் கல்யாணம் பண்ணிக் கொண்டு, லௌகீக வாழ்க்கையையும் balance செய்து வாழும் தூய பக்திமான்களும் ப்ரம்மச்சாரிகளே!

கல்யாணம் செய்து கொண்டு அத்தகைய ப்ரம்மச்சாரியாய் வாழ்ந்த ஒரு அன்பரையே ப்ரம்மச்சாரிஜியாக வடதேசம் இன்றும் போற்றுகிறது.அவரைக் காண மதுராவிற்குப் போகலாமா?

**மதுராவிற்கு நிம்மதி தேடி...**

ஹரித்வாரில் வாழ்ந்த சிறந்த ஆன்மீகப் பெரியார் ஒருவர்.அவர் மனநிம்மதி வேண்டி, ஆழ்ந்த ஆன்மீக ஞானம் வேண்டி, மதுராவிற்குச் சென்றார்.அப்போது அவருடன் ஒரு அழகிய இளைஞனும் சேர்ந்து கொண்டான்.வழிப்பயணத்தில் அவனுடன் பழகியதில் அவனது மிக உயர்ந்த பக்குவம் கொண்ட மனம் அவருக்குப் புரிந்தது.அவனை எண்ணிப் பெருமை கொண்டார்.

**நமக்கு முன் செல்லும் விதி**

மதுராவிற்குச் சென்ற நாள் முதல் பெரியவருக்கு வயிற்று நோய் ஏற்பட்டது.மிகக் கடுமையான வ்யாதியாக அது மாறியது.ப்ரம்மச்சாரி இளைஞன் அவரை மிக ஸ்ரத்தையுடன் கவனித்து சுமார் மூன்று மாத காலம் தீவிர சிகிச்சை அளித்தான்.அதனால் குணம் ஆன அவர் அவனுள் இருக்கும் சத்ய தெய்வ ஸ்வரூபத்தை த்யானித்தார்.

**வைத்யத்துக்கு தக்ஷிணை**

அவனுக்குத் தன் பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்க முடிவு செய்தார்.இவனை ஒத்த ஒருவனைக் கைப்பித்தால், அவளுக்கு ஆன்மீக வாழ்வும் பக்தியும் கைகூடும் என்பதை அவர் முழுமையாக நம்பினார்.தன் மகளுக்குச் செய்யும் ஒரே பெரிய தர்மம் அது என்று தெளிந்தார்.

இதை மறுத்த அவன் மிகவும் வற்புறுத்தலின் பேரில் சம்மதித்தான்.இல்லறத்தில் துறவறம் மேற்கொண்டு அதன் மூலம் முக்தியை அடையும் மார்கத்தையும் அவன் அறிவான்.மேலும் அவனது சித்தத்தில் அப்பெண் இப்பிறவியில் தன்னுடன் பந்தப்பட்டு ஆன்மீகத்தில் ஈடுப்பட சங்கல்பம் செய்து கொண்டதையும் அவன் விழிப்புணர்வால் அறிகிறான்.

பெரியவரும் ப்ரம்மச்சாரியும் மதுராவில் ஸ்ரீராதாமோஹன க்ருஷ்ணன் முன் சங்கல்பம் செய்து, சத்யம் செய்து ஹரித்வார் திரும்பினர்.

**அவமானம் செய்த குடும்பம்**

இவரது போக்கைப் பிடிக்காத இவரது மனைவியும் பிறரும் இவரைத் தூற்றினர்.குறிப்பாகச் சில மாதங்கள் அவர் இல்லாமல் போனதை எண்ணி எண்ணித் திட்டித் தீர்த்தனர்.அவரது பொறுப்புணர்வைச் சாடினர்.

தன் நிலையை அவர் எடுத்துக் கூறி மகளை ப்ரம்மச்சாரிக்குக் கல்யாணம் செய்து வைக்கும் எண்ணத்தை வெளியிட உறவுகளைக் கூட்டி அவரை அவர் மனைவி பெருத்த அவமானம் செய்தாள்.ப்ரம்மச்சாரியையும் அவமதித்தாள். அவன் அமைதியாகவே இருக்கிறான்.கடைசியில் அவர்கள் ஹரித்வார் ராஜாவிடம் வழக்குத் தொடுத்தனர்.அவனும் வழக்கை விசாரிக்க, இவர் தன் நிலையையும் சத்யத்தையும் கூற, ராஜாவும் உறவுகளும் ”போயா! போடா! அந்த மாயக் கண்ணனை அழைத்து வாங்கோ!” என்று கேலி செய்து எள்ளி ஆடினர்.

ஸ்திடமான பக்தியுடன் மதுரா சென்றான் ப்ரம்மச்சாரி.தன் ப்ரமச்சரிய தத்துவத்தை ஆழ்ந்து உணர்ந்த அவன் கண்ணனை சத்யமாக அழைத்தான்.கண்ணன் காட்டிய ஆன்மீகப் போக்கில் தானும் தன் மனைவியும் வாழ முற்படுவதை உணர்ந்து ப்ரார்த்தித்தான்.

**ப்ரம்மச்சாரியைப் பின்தொடர்ந்த கண்ணன்**

”அன்பா! நீ முன் செல், நான் பின் வருவேன்!” என்று கண்ணன் அவன் மெய்யுணர்வில் கூற, அவனும் ஸ்ரீமத் பாகவதம் சொல்லிக் கொண்டே செல்ல, கண்ணன் சகல சத்யமாக அவனைத் தொடர்ந்தான்.ஹரித்வார் மாநகரில் அனைவரும் காண மதுராவின் மூல விக்ரஹம் காட்சி கொடுத்தது.சத்யத்தின் உட்பொருளான ஈசனின் லீலையையும் ப்ரம்மச்சாரியின் ஆன்மீக உயர்வைக் கண்டும் மக்கள் வணங்கினர்.ராஜா மன்னிப்பு கேட்டார்.பெரியவரின் மனைவியும் பந்துக்களும் ஒரே மனதாக மகளைக் கல்யாணம் செய்து கொடுத்தனர்.ஹரி ஓம்!